# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2193/46 - 2020 සැප්තැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2020.09.18

***2193/46 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ)வின் கீழான கட்டளை*

***2020 இன் 61 ஆம் இலக்கக் கட்டளை***

*எனது குறிப்பு இல. 4-3/6/2019/எச்டபிள்யூ/247*
*பிரதேச செயலாளர் குறிப்பு இல. : திம்பிரி/1/8/3/74*

*காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் கடமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

*எஸ்.எம். சந்திரசேன,*
*காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்.*

*காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு,*
*“மிஹிகத்த மெதுர”, காணிச் செயலகம்,*
*இல.1200/6, ரஜமல்வத்தை வீதி,*
*பத்தரமுல்லை.*
*2020, செத்தெம்பர் 12.*

*1.* **சுவீகரித்தல் உத்தியோகத்தர்**:- *பிரதேச செயலாளர், திம்பிரிகஸ்யாய.*

**2. காணியின் விபரம்**:- *மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில், (கொழும்பு மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட) தெமட்டகொடை கிராம அலுவலர் பிரிவில் உள்ள, தெமட்டகொடை கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவை மா அதிபதி சார்பாக கொழும்பு மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 2019.10.18 ஆம் திகதிய முதற் சுவட்டு இல. கொ/தி/2019/668 இல் துண்டு இலக்கங்கள் 1 - 4 வரை விபரிக்கப்பட்டுள்ள, சுமார் 0.1800 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய காணித் துண்டுகள் பின்வரும் எல்லைகளினாலும் விஸ்தீரணங்களினாலும் விபரிக்கப்பட்டுள்ளது :*

*01.* **துண்டு இல. 1 - வரி மதிப்பீட்டு இல. 752/5, எல்விட்டிகல வீதி - விஸ்தீரணம்: 0.0063 ஹெக்டயார்**

*வடக்கு : தெமட்டகொடை வாய்க்கால் ; கிழக்கு : தெமட்டகொடை வாய்க்கால் ; தெற்கு : எல்விட்டிகல மாவத்தையில் வரி மதிப்பீட்டு இல. 752/5 ஐக் கொண்ட காணி ; மேற்கு : எல்விட்டிகல மாவத்தையில் வரி மதிப்பீட்டு இல. 752/5 ஐக் கொண்ட காணி.*

*02.* **துண்டு இல. 2 - தெமட்டகொடை வாய்க்கால் - விஸ்தீரணம்: 0.1348 ஹெக்டயார்**

*வடக்கு : வீதி ; கிழக்கு : வீதி மற்றும் தெமட்டகொடை வாய்க்கால் ; தெற்கு : தெமட்டகொடை வாய்க்கால் மற்றும் வீதி மற்றும் துண்டு இல. 3 ; மேற்கு : துண்டு இல. 3, வீதி மற்றும் தெமட்டகொடை வாய்க்கால்.*



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*03.* **துண்டு இல.** *3* **- விஸ்தீரணம்: 0.0316 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 2 ; கிழக்கு : துண்டு இல. 2, தெமட்டகொடை வாய்க்கால், வீதி, துண்டு இல. 4 மற்றும் பெயர் மற்றும் உரிமை கோருபவர் கண்டுபிடிக்க முடியாத காணி ; தெற்கு : வீதி, சீமேந்து வாய்க்கால், துண்டு இல. 4 மற்றும் பெயர் மற்றும் உரிமை கோருபவர் கண்டுபிடிக்க முடியாத காணி ; மேற்கு : துண்டு இல. 4 மற்றும் வீதி.

*04.* **துண்டு இல.** *4* **- விஸ்தீரணம்: 0.0073 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 3 ; கிழக்கு : துண்டு இல. 3, வீதி மற்றும் சீமேந்து வாய்க்கால் ; தெற்கு : சீமேந்து வாய்க்கால் மற்றும் பெயர் மற்றும் உரிமை கோருபவர் கண்டுபிடிக்க முடியாத காணி ; மேற்கு : பெயர் மற்றும் உரிமை கோருபவர் கண்டுபிடிக்க முடியாத காணி மற்றும் துண்டு இல. 3.

10 -130

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.